# வாரப்பாடசாலை செயற்பாட்டுப் பத்திரம்.

## பாடம்:- தமிழ் தரம்:- 12

01. பின்வரும் கவிதையை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

உலகமிசை உணர்வெழுப்பிக் கீழ்த்திசையின் மீதில்
உதித்துவிட்டான் செங்கதிரோன்இ தகத்தகாயம் பார்!
விலகிற்றுக் காரிருள்தான்: பறந்ததுபார் அயர்வு!
விண்ணிலெல்லாம் பொன்னொளியை ஏற்றுகிறான் அடடா!

மிலையும்எழிற் பெருங்கடலின் அமுதப்ரவாகம்!
மேலெல்லாம் விழி அள்ளும் ஒளியின் பிரவாகம்!
நலம்செய்தான், ஒளி முகத்தைக் காட்டிவிட்டான், காட்டி
நுடத்துகிறான் தூக்கமதில் ஆழ்ந்திருந்த உலகை!
ஒளிசெய்தான் கதிர்க் கோமான் வானகத்தில் மண்ணில்!
உயர்மலைகள், சோலைநதி இயற்கை எழில்கள் பார்!

களிசெய்தான் பெருமக்கள் உள்ளத்தில்! ஆதனால்
கவிதைகள், கைத்தொழில்கள் என்னென்ன ஆக்கம்!
தெளிவளிக்க இருட்கதவை உடைத்தெறிந்தான் பரிதி
திசைமகளை அறிவுலகில் தழுவ்கின்றார் மக்கள்:
ஒளியுலகின் ஆதிக்கம் காட்டுகின்றான்: வானில்
உயர்கின்றான்: உதயசூரியன் வாழ்க நன்றே!

1. இக்கவிதையின் பிரதான கருத்து யாது?
2. உதயசூரியன் பற்றிய கவிஞரின் கருத்து யாது?
3. இக்கவிதையில் காணப்படும் அணிச்சிறப்புக்களை எடுத்துக்காட்டுக.
4. **“தெளிவளிக்க இருட்கதவை உடைத்தெறிந்தான் பரிதி திசைமகளை அறிவுலகில் தழுவுகின்றார் மக்கள்”** ,இவ்வரிகள் உணர்த்துவன எவை?

02. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 250-300 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.
    1. தமிழ் ஒரு பண்பாட்டு மொழி
    2. தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெண்களின் பங்கு
    3. சமூக சமத்துவமும் தேசிய ஒருமைப்பாடும்
    4. கற்றனைத்தூறும் அறிவு
    5. பழமொழிகள் கூறும் போதனை